அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 11/2024

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001
நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும்
தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2024.11.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பொதுக்கூட்டுத்தாபனங்கள் /நியதிச்சட்ட சபை தலைவர்கள்

**<u>அரசாங்க துறையில் கணினி விடயங்களுக்காக கணினிக் குறியீடுகள் மற்றும் எழுத்துருக்களை (Unicode Compatible Fonts) பயன்படுத்தல்</u>**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையின்படி பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் MWCA&SE/NSPD/Legal CC 1/SC-FR-177-2023 மற்றும் 2024.08.30 தினத்தன்றான கடிதத்திற்கு கவனத்தை செலுத்துகின்றேன்.

02. அதனூடாக அரசாங்க நிறுவனங்களில் கணினி ஆவணங்களை திட்டமிடலின் போது மற்றும் இணையப் பக்கங்களை தயார் செய்து நடாத்திச் செல்லும் போது அரசாங்க நிறுவனங்களின் ஊடாக ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட குறியீட்டு எழுத்துக்கோவை முறைமையை பயன்படுத்துவதினால் அவ் கணினி ஆவணங்கள் மற்றும் இணையப் பக்கங்கள் பயன்படுத்தும் கண் பார்வையற்ற ஆட்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

03.sஅதன்படி, அரசாங்க நிறுவனங்களின் மூலம் ஆவணங்களை தயார் செய்யும் போது மற்றும் இணையப் பக்கங்களை நடாத்திச் செல்லும் போது பார்வையற்ற ஆட்களுக்கு பயன்படுத்தக்கூடிய முறையில் கணினிக் குறியீடுகள் மற்றும் எழுத்துக்களைப் பயன்படுத்தி (Unicode Compatible Fonts) மும்மொழிக்குரிய கணினி ஆவணங்கள் மற்றும் இணையப் பக்கங்களை தயாரித்தல் வேண்டும். இதற்காக இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணினிக் குறியீடுகள் மற்றும் எழுத்துருக்களைக் கொண்ட கணினி மென்பொருள் பயன்பாட்டிற்கு பயன்படுத்த முடியும்.

04. அத்தோடு அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்காக சமர்ப்பிக்கும் அனைத்து ஆவணங்களும் மற்றும் அறிவித்தல்களும் கணினிக் குறியீடுகள் மற்றும் எழுத்துருக்களை பயன்படுத்தி தயார் செய்து PDF மற்றும் Word முறையில் முன்வைக்க வேண்டும்.

05. இது தொடர்பில் இதற்கு முன்னர் சனாதிபதி செயலாளரின் மூலம் வெளியிடப்பட்ட 2007.03.14 தினத்தன்றான சுற்றறிக்கை இலக்கம் SP/SB/01/07 தொடர்பில் கவனத்தை செலுத்துங்கள்.

ஒப்பம் / எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும்
தொழில் அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112662340
தொலைநகல் இலக்கம் : 0112692158
மின்னஞ்சல் முகவரி : adei@pubad.gov.lk